2000 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 147, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.*

147—

கசிவுநீர்க் குட்டை

***22998—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டுத் தொகுதியில், புன்செய் நிலப் பகுதிகளில், கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கும் திட்டம், அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஊரக வளர்ச்சித் திட்டத்தின் சார்பாக, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வழங்கிய நிதி ஒதுக்கீட்டில், கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கும் பணி, வேளாண்மைப் பொறியியல் துறையால் செயல்படுத்தப்படுகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில், கடந்த 1998-99-ம் ஆண்டும், நடப்பு 1999-2000 ஆண்டும் புதிய கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கப்படவில்லை. ஆயினும், கடந்த ஆண்டு 1998-99-இல் சிறு பாசன ஏரிகள், கிராமக் குளங்கள், கோயில் குளங்கள் போன்ற 59 நீர் சேகரிப்புப் பணிகள், ரூ.116.69 இலட்சம் செலவிலும் நடப்பு ஆண்டு 1999-2000-இல், 52 பணிகள், ரூ.13.32 இலட்சம் செலவிலும் செயல்படுத்தப்பட்டுள்ளன.

திரு. க. மணிவர்மா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டுப் பகுதி முழுமையும், விவசாயத்தை நம்பியிருக்கிற மக்கள் வாழ்கிறார்கள். குறிப்பாக, புன்செய் நிலங்கள் நிறைந்த பகுதியாகவே அது இருக்கிறது. நிலத்தடி நீரையே நம்பி, விவசாயத்தைச் செய்து வருகின்ற அந்த விவசாயப் பெருங்குடி மக்கள், அங்கு கசிவுநீர்க் குட்டை அமைத்து, அதன்மூலம் நீரைத் தேக்கி, நிலத்தடி நீரைப் பெருக்குவதற்குண்டான வாய்ப்புகளை அதிக அளவிலே எதிர்பார்க்கிறார்கள். விவசாயப் பெருங்குடி மக்கள் எதிர்பார்க்கின்ற வகையிலே, இரண்டு, மூன்று ஆண்டுகளாக, அங்கு கசிவுநீர்க் குட்டைகள் அமைப்பது செயல்படுத்தப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் சொன்னார்கள். ஒரு ஊராட்சிக்கு ஒரு கசிவுநீர்க் குட்டை மூலம் நீரைத் தேக்கி, நிலத்தடி நீரைப் பெற்றாவது, விவசாயம் செய்வதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டாவது மறுபரிசீலனை செய்து, அதற்கான நிதியை ஒதுக்கித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டு தொகுதியை உள்ளடக்கிய திருவண்ணாமலை மாவட்டத்தில் 1984-85 ஆம் ஆண்டு முதல் 1997-98 ஆம் ஆண்டு வரை 733 கசிவுநீர்க் குட்டைகள் ரூபாய் 8.54 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இப்போது மத்திய அரசாங்கம் வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழே நிதி ஒதுக்கீடு செய்வதிலே காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்தால், இத்தகைய பணிகளை எடுத்துக்கொள்வது பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. க. மணிவர்மா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத் துறை மூலம் NWDPRA போன்ற பல்வேறு திட்டங்களை முழுமையாக மக்களுக்குச் சிறப்பாகச் செயல்படுத்த முடியவில்லை என்றாலும், அந்த நிதிகளை எல்லாம் ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு கசிவுநீர்க் குட்டை அமைப்பதற்காக வேளாண்மைத் துறையே எடுத்துச் சிறப்பாகச் செய்து தந்தால்தான் விவசாயத்தைப் பெருக்குவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு, வேளாண்மைத் துறை மூலமே இந்தக் கசிவு நீர்க்குட்டை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பொறியியல் துறைக்கு இதுபோன்ற கசிவுநீர்க் குட்டை அமைப்பதற்கு என்று மாநில அரசாங்கம் தனி நிதி ஒதுக்கீடு செய்வது இல்லை. E.A.S. திட்டத்தின்கீழே வழங்கப்படக்கூடிய நிதியிலிருந்துதான் இத்தகைய பணிகளை நாம் மேற்கொள்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் DWCRA அல்லது NWDPRA திட்டம் பற்றிச் சொல்கிறார், அந்த நிதியை இதிலே பயன்படுத்தலாம் என்று.

2000 மார்ச் 30]

அது வேறு திட்டம். இதுபோன்ற கசிவுநீர்க் குட்டைகளுக்கு அதைப் பயன்படுத்த முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 148, திரு. கோ. நயினா முகமது, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.*

148—

ஓய்வு விடுதி

***29438—திரு. கோ. நயினா முகமது:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் தொகுதியில் முந்தல் என்னுமிடத்தில் வனத் துறை ஓய்வு விடுதி கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. கோ. நயினா முகமது: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கடையநல்லூர் தொகுதியில் முந்தல் என்னும் இடம் உள்ளது. வருடம் முழுவதும் தண்ணீர் வரக்கூடிய நீர்நிலைகள் உள்ளன. மிகவும் பசுமையான மழை வளம் கொண்ட இடம். கோடை காலத்தில் நல்ல வெயில் அடிக்கும்போது கூட அங்கே குளுமையாக இருக்கும். அங்கே ஒரு பிரசித்திபெற்ற கோயிலும் உள்ளது. வருடம் முழுவதும் சுற்று வட்டார மக்கள் ஓய்வு எடுக்கச் செல்லும் இடமாகவும் உள்ளது. எனவே, வனத் துறையின் சார்பாக ஓர் ஓய்வு விடுதி கட்டித் தர அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையில் நிலைமைக்கேற்ப, தேவைக்கேற்ப விடுதிகள்*